கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி (ம.சா.2)

STC No.46/2023

| | | |
|---|---|---|
| பெயர் | - | செல்வ ரெஜி |
| க/பெ | - | செல்வின்துரை |
| கிராமம் | - | காவல்கிணறு |
| தாலுகா | - | இராதாபுரம் |
| தொழில் | - | சுயதொழில் |
| வயது | - | 48 |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 21ம் நாள் வெள்ளிக்கிழமை மேற்படியாரிடமிருந்து சத்திய பிரமாணத்தின் பெயரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். என்னுடைய கணவர் தாக்கல் செய்த இவ்வழக்கில் எனது கணவரின் இறப்பிற்கு பிறகு நான் புகார்தாரராக சீர்திருத்தம் செய்யப்பட்டு தற்போது சாட்சியம் அளிக்கிறேன். எனது கணவர் இவ் வழக்கில் புகார்தாரர் ஆவார். எனது கணவர் 13.05.2023 அன்று காலம் சென்று விட்டார். அவர் இறந்த பிறகு அவருக்காக இவ்வழக்கை நான் நடத்தி வருகிறேன்.எனக்கு இவ்வழக்கு எதிரியை தெரியும். எதிரி எங்கள் ஊரைச் சார்ந்தவர். எனது கணவர் உயிருடன் இருக்கும்போது இருசக்கர வாகனம் வாங்கி விற்கும் தொழில் செய்து வந்தார். எனது கணவருக்கு மாதம் ஒரு லட்சம் வரை வருமானம் கிடைக்கும். இவ் வழக்கின் எதிரி வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார். எதிரி எனது கணவருக்கு தூரத்து உறவினர் ஆவார் மற்றும் ஒரே ஊரை சார்ந்தவர் என்ற முறையில் தெரியும்.எதிரி எனது கணவரிடமிருந்து ரூபாய் ஒரு லட்சம் கடன் வாங்கினார். எதிரி குடும்பச் செலவுக்காக 2 மாதத்தில் தந்துவிடுவதாக கூறி கடன் வாங்கினார். எதிரி எங்களுடைய கடைக்கு வந்து காசோலையை தந்து விட்டு பணத்தை

Digitally signed by MITHUNA A KAISER
MITHUNA A KAISER
Date: 2025.11.21 15:34:22 +0530

பெற்று சென்றார். அப்போது நான் என் கணவருடன் இருந்தேன். ஆனால் எதிரி 2 மாதத்தில் பணத்தை திருப்பி தரவில்லை. எதிரி தன்னுடைய சம்பளம் 7 தேதிக்குள் வரும் என்றும், அப்போதுகாசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யுமாறு கூறினார். எனது கணவருக்கு TMB மற்றும் SBI வங்கிகளில் வங்கி கணக்கு உள்ளது. எனது கணவர் வழக்கிடை காசோலையை TMB வங்கி வடக்கன்குளம் கிளையில் தாக்கல் செய்தார். மேற்படி காசோலை ஆனது Payment stopped என திருப்பப்பட்டது. அதன்பிறகு எனது கணவர் பணத்தை கேட்டு எதிரியிடம் பேசினார். பணம் கேட்டபோது எதிரி தான் Payment stop என செய்து வைத்துள்ளேன், பணத்தை தரமுடியாது என கூறினார். பின்னர் எனது கணவர் வழக்கறிஞர் பார்த்து அறிவிப்பு அனுப்பி இவ்வழக்கை தாக்கல் செய்தார். இதுவரை எதிரி எவ்வித பணமும் எங்களுக்கு தரவில்லை.

ம.சா.2 முதல் விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்கள் குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.11.21 15:34:29 +0530